இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 23 ம் இலக்க, காட்டுத் (திருத்தச்) சட்டம்

---

(1995, நவெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1995, நவெம்பர் மாதம் 17 ஆந் தேதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

ரூபா : 1.65

தபாற் செலவு : ரூபா 2.55

[1995, நவெம்பர் மாதம் 15ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஒ. 77/92

## காட்டுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, காட்டுத் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப் பின்னர் முதன்மைச் சட்டவாக்கமெனக் குறிப்பிடு செய்யப்படும் காட்டுக் கட்டளைச் சட்டத்தின் விரிவுப்பெயர் இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் விரிவுப்பெயர் அதற்குப் பதிலாக இடப் படுகின்றது :— 451 ஆம் அத்தியாயத்தின் விரிவுப்பெயரை மாற்றீடு செய்தல்.

"காடுகளையும் காட்டு வளங்களையும் பேணுதல், பாதுகாத்தல் அத்துடன் முகாமை செய்தல் தொடர்பிலான சட்டத்தைத் திரட்டுவதற்கும், திருத்துவதற்கும் காட்டு விளைவுப் பொருளை வெட்டுவதையும் கடத்துவதையும் கட்டுப்பாடு செய்வதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்குமானதொரு கட்டளைச் சட்டம்."

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவானது "இக்கட்டளைச் சட்டத்தின்கீழ்" என்பதில் தொடங்கி, "இல்லாதொழிதல் வேண்டும்" என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கிவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. மூன்றும் பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 3அ, 3ஆ, 3இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 3அ, 3ஆ அத்துடன் 3இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

"காடுகளைப் பேணுதல் பற்றி வெளிப்படுத்துதல்.

3அ. (1) தனித்தன்மை வாய்ந்த சூழலியல் தகுதிகள், இன ரீதியான மூலவளங்கள் இருக்கின்றதான அல்லது அருமையானவையும் அழிந்துபோகக்கூடியவையுமான தாவர, விலங்கின மற்றும் நுண்ணங்கி இனங்களும், அழிந்துபோகும் ஆபத்துக்களுள்ள இனங்களும் வாழுகின்றதான அரச காணியின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நிலப்பரப்பு அல்லது ஏதேனும் ஒதுக்கப்பட்ட காட்டின் முழு இடப்பரப்பும் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய திகதியிலிருந்து போதியளவு மழை வீழ்ச்சியை உறுதிப் படுத்துவதன்மூலம் உப்பாக்கத்தை அல்லது ஆறுகள் வற்றுவதையும், தடைப்படுத்துவதன்மூலமும், மின் வலுவுக்கும் நுகர்வுக்கும் நீர்வழங்குகின்ற நீர்த்தேக்கங்கள் வற்றுவதனைத் தடுப்பதன்மூலமும், மனித உயிர்வாழ்வுக்கு ஆபத்து விளைவிக்கின்ற மண்சரிவுகளையும், தீவிபத்துக்களையும் தடுப்பதன்மூலமும் சூழலியல்

சமநிலையைப் பேணுவதற்காகப் பேணப்படும் காடு என அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் வெளிப்படுத்தலாம்.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்றும் அதன் பின்னரும் அத்தகைய அரச காணி அல்லது ஒதுக்கப்பட்ட காட்டின் பாகம் முழுவதும் பேணப்படும் காடொன்றாக வருதல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைவாக காடுகள் பராமரிப்பாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இருத்தலும் வேண்டும்.

3அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை வெளியிடுதல் வேண்டும்.

3ஆ. பேணப்படும் காடு எந்தப் பெரும்பாகச் செயலாளர் பிரிவில் அல்லது பிரிவுகளில் அமைந்துள்ளதோ அந்தப் பெரும்பாகச் செயலாளர் அல்லது விடயத்திற்கு எந்தப்போல் பெரும்பாகச் செயலாளர் பிரிவின் அல்லது பிரிவுகளின் செயலாளர்கள் பேணப்பட்ட காடென வெளிப்படுத்தும் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் பேணப்பட்ட காட்டின் ஏதேனும் பாகம் அமைந்துள்ள அந்தந்த பெரும்பாகச் செயலாளர் பிரிவுகளுக்குள்ளாகவும் அத்துடன் அத்தகைய பேணப்பட்ட காட்டின் மிக நெருங்கிய அயற்புறத்திலுள்ள ஒவ்வொரு பட்டினத்திலும் அல்லது கிராமத்திலும்—

(அ) உத்தேசப் பேணப்படும் காட்டின் இடவமைவையும் எல்லைகளையும் இயன்றளவிலெடுத்துக் குறிப்பதன்மூலமும்; அத்துடன்

(ஆ) உத்தேச பேணப்படும் காட்டை வெளிப்படுத்துவதன் விளைவாக ஏற்படக்கூடிய விளைவுகளை விளக்குவதன்மூலமும்,

அத்தகைய கட்டளைக்குப் போதுமான பிரசாரம் கிடைப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

பேணப்படும் காட்டின் எல்லைகளை வேறுபடுத்தல்.

3இ. (1) அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் ஏதேனும் பேணப்படும் காட்டின் எல்லைகள் மாற்றப்பட வேண்டுமென அல்லது வேறுபடுத்தப்பட வேண்டுமென வெளிப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் அமைச்சரால் கட்டளை பொன்று, அது சனாதிபதியால் அங்கீகரிக்கப்பட்டு, பாராளுமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டு, அத்தகைய உறுதிப்படுத்தல் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படும்வரை பயனுடையதாதலாகாது.

காட்டுப் பராமரிப்பாளரால் வழங்கப்படும் சான்றிதழ் அதனைத்துக் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

3அ. இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் குற்ற நடவடிக்கை தொடுக்கப்படுமிடத்து, ஏதேனும் காணி ஒரு காடு பேணுகைக்குள்ளானதாக இருப்பின், சான்றிதழில் விபரிக்கப்படும் காணியானது, ஒரு காடு பேணுகைக்குள்ளானது என்ற பயன்பட காடுகள் பராமரிப்பாளரின் கைப்பட வழங்கப்பட்ட சான்றிதழொன்று, சான்றாக அனுமதிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதனைத்துக் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தாறும் ஆண்டின் 13 ஆம் இலக்க, சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "உட்படுத்துகின்ற அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உட்படுத்துகின்ற" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்—

(2) அப்பிரிவின் (உ) என்னும் பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் :—

"(உஉ) முருகைக் கற்களை அல்லது சிப்பி ஓடுகளைப் பிரித்து எடுக்கின்ற, காரியத்தை, இரத்தினக்கற்களை அல்லது வேறு கனிப்பொருள்களைத் தோண்டி எடுக்கின்ற அல்லது அகழ்கின்ற; அல்லது";

(3) "குற்றத்தீர்ப்பு அளிப்பதன்மேல்" என்பதிலிருந்து அப்பிரிவு முடியும் வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலமும் :—

"குற்றத்தீர்ப்பு அளிப்பதன்மேல் ஆறு மாதங்களுக்குக் குறையாததும், நான்கு வருடங்களுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கான மறியற் தண்டனைக்கு அல்லது இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவுக்குக் குறையாததும் அல்லது இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனையாகிய இரண்டுக்கும் அத்துடன் தவறொன்றைப் புரிகின்றதால் விளைகின்ற சேதமானது பெறுமதியில் இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படுகின்றவிடத்து விதிக்கப்படும் தண்டனையோடு மேலதிகமான தவறைப் புரிவதனால் விளைவித்த சேதத்தின் இரண்டு மடங்கிலான தொகையைக்கொண்ட குறிப்பிட்ட பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 84 ஆம் இலக்க, சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (1) ஆம் பந்தியை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் -

"(1) ஏதேனும் பெயர்ப் பலகையை, கைப் பலகையை அல்லது ஏதேனும் சுவரை, அகழியை, அணைக்கட்டை, வேலியை, புதரை, கம்பி வேலியை அல்லது வேறு எல்லைக் குறியைச் சேதப்படுத்துகின்ற, முறிக்கின்ற அல்லது அகற்றுகின்ற.".

(ஆ) "வேறு ஏதேனும் பந்தியின்கீழான தவறொன்றின் விடயத்தில்" என்பது தொடங்கி அவ்வுட்பிரிவின் எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையிடுவதன்மூலமும் :—

"இந்த உட்பிரிவின் வேறேதேனும் பந்தியின்கீழான தவறொன்றின் விடயத்தில் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான காட்டுக்குச் செய்யப்பட்ட சேதத்திற்கான அத்தகைய நட்டஈட்டுக்கு மேலதிகமாக 6 மாதங்களுக்குக் குறையாததும் ஒரு வருடத்திற்கு மேற்படாததுமான மறியற்றண்டனைக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் அத்துடன் மறியற்றண்டனை இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும். அத்தகைய நட்டஈடு இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சுதல் ஆகாது. அத்துடன் அத்தொகைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டால் எல்லா அம்சங்களிலும் குற்றப் பணமொன்றாகக் கருதப்படலாமென்பதுடன் அத்தகையதென்றவாறாக அறவிடப்படுதலும் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கம் செய்வதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 7அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல் வேண்டும்.

7. ஏழாம் பிரிவை உடனடுத்துப் பின்னர், பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பேணப்படும் காடொன்றில் தவறொன்றாக அமையும் செயல்கள்.

7அ. (1) இப்பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பேணப்படும் காடொன்றில் எவரேனும் ஆள்—

(அ) அத்துமீறிப் பிரவேசிக்கின்ற அல்லது கால்நடைகளை அத்துமீறிப் பிரவேசிக்க அனுமதிக்கின்ற;

(ஆ) ஏதேனும் மரத்தை, தாவரத்தை அல்லது வேறு ஏதேனும் காட்டு விளைபொருளை, வெட்டி வீழ்த்துகின்ற, வெட்டுகின்ற, குறி வைக்கின்ற, நுனிவெட்டுகின்ற, இடை அரிகின்ற, மரம் அரிகின்ற, மாற்றுகின்ற, சேர்க்கின்ற அல்லது அகற்றுகின்ற;

(இ) ஏதேனும் மரத்திலிருந்து பட்டையை உரித்து எடுக்கின்ற அல்லது இலைகளைப் பறித்து எடுக்கின்ற அல்லது வேறுவகையாகச் சேதப்படுத்துகின்ற அல்லது தலையிடுகின்ற;

(ஈ) கால்நடையை மேயவிடுகின்ற அல்லது புல் வெட்டுகின்ற;

(உ) நீரை அசுத்தமாக்குகின்ற;

(ஊ) ஏதேனும் தாவரத்தை அகற்றுகின்ற, பிடுங்குகின்ற, அழிக்கின்ற அல்லது ஏதேனும் தாவரத்திற்கு ஏதேனும் சேதம் அல்லது ஊறுபாடு விளைவிக்கின்ற;

(எ) ஏதேனும் தாவரத்தை விற்கின்ற, விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கின்ற, அல்லது விற்பனைக்கு முனைகின்ற;

(ஏ) ஏதேனும் பறவையை அல்லது விலங்கை அல்லது ஊர்வனவற்றை குறிவைத்துப் பிடிக்கின்ற, வெடிவைத்துப் பிடிக்கின்ற துன்பப் படுத்துகின்ற அல்லது குழப்புகின்ற;

(ஐ) ஏதேனும் அத்தகைய பறவையின் விலங்கை அல்லது ஊர்வனவற்றை விற்கின்ற, விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கின்ற அல்லது விற்பனைக்குக்காட்ட முனைகின்ற அல்லது ஏதேனும் அத்தகைய பறவையின் விலங்கின் அல்லது ஊர்வனவற்றின் ஏதேனும் பாகத்தை அவ்வாறு விற்கின்ற;

(ஒ) ஏதேனும் பறவையின் அல்லது ஊர்வனவற்றின் ஏதேனும் முட்டையை அல்லது ஏதேனும் பறவையின் கூட்டை எடுக்கின்ற அல்லது அழிக்கின்ற;

(ஓ) ஏதேனும் காட்டு விலங்கைக் குழப்பக்கூடிய விதமாக அல்லது குழப்புகின்ற ஏதேனும் துவக்கை வெடிக்கவைக்கின்ற அல்லது ஏதேனும் தொல்லையைச் செய்கின்ற அல்லது அத்தகைய விலங்கின் இனப்பெருக்க இனத்தோடு தலையிடுகின்ற அல்லது தலையிடக்கூடிய ஏதேனும் தொல்லையைச் செய்கின்ற;

(ஔ) எதேனும் விலங்கை அல்லது தாவரத்தை கைப்படுத்தும் அல்லது அழிக்கும் நோக்கத்திற்காக பயன்படுத்தக்கூடிய ஏதேனும் பொறியை அல்லது ஏதேனும் வெடிப்பொருளை அல்லது நச்சுப் பதார்த்தத்தை வைத்திருக்கின்ற அல்லது பயன்படுத்துகின்ற;

(க) தற்காலிகமாக ஆயினுஞ்சரி நிரந்தரமாக ஆயினுஞ்சரி ஏதேனும் கட்டிடத்தைக் கட்டுகின்ற அல்லது அவ்வாறு கட்டியமைக்கப்பட்ட ஏதேனும் கட்டிடத்தை இருப்பாட்சி செய்கின்ற;

(ங) கற்களைப் புதிதாகத்தோண்டுகின்ற அல்லது அகழ்ந்தெடுக்கின்ற அல்லது கடற்பாசியை அல்லது சிப்பிகளைத் தோண்டியெடுக்கின்ற அல்லது காரியம் தோண்டியெடுக்கின்ற அல்லது அகழ்கின்ற அல்லது இரத்தினக் கற்கள் அல்லது கனிப்பொருள் எடுக்கின்ற சுரங்கம் அல்லது ஏனைய பொருளை உடைக்கின்ற;

(ச) ஏதேனும் தீயை மூட்டுகின்ற, வைத்திருக்கின்ற, அல்லது காவிச்செல்கின்ற;

(ஞ) பயிர்செய்யும் நோக்கத்திற்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக ஏதேனும் காணியை;

(ட) ஏதேனும் வீதியை நிருமாணிக்கின்ற;

(ண) ஏதேனும் சுவரை, அகழியை, அணையை, வேலியை, புதரை, கம்பிவேலியைப் பெயர்ப் பலகையை, சைகைப் பலகையை அல்லது வேறேதேனும் எல்லைக்குறியை சேதப்படுத்துகின்ற, மூறிக்கின்ற அல்லது அகற்றுகின்ற,

ஆள் எவரும் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் இவ்வுட்பிரிவின் (ஆ), (ஔ), (க), (ங), (ச) என்னும் பந்திகளின்கீழான தவறொன்றன் விடயத்தில் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன்மேல், இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் எழு ஆண்டுகளுக்கு மேற்படாததுமான மறியற்றண்டனைக்கும், இவ்வுட்பிரிவின் வேறு ஏதேனும் பந்திகளின் கீழானவொரு தவறின் விடயத்தில், ஓர் ஆண்டிற்குக் குறையாததும், ஐந்து ஆண்டுகளை விஞ்சாததுமான மறியற்றண்டனைக்கு அல்லது பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிட்ட ஏதேனும் தவறைப் புரிவதில் உதவிபுரிகின்ற அத்துடன் துணைபுரிகின்ற எவரேனும் ஆள் அல்லது அத்தகைய தவறைப் புரியப்படச் செய்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன்மேல் அத்தவறிற்கென குறித்துரைக்கப்பட்ட அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ளது ஏதேனும் இக்கட்டளைச் சட்டத்தின் அல்லது காடுகளை நிருவகித்து முகாமைசெய்து பேணுதல் தொடர்பாக அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு இணங்க சட்டபூர்வமாகச் செய்யப்பட்ட எந்தச் செயலையும் தடுப்பதாகக் கருதப்படுதல் ஆகாது.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது, "மேற்படாத கூறப்பட்ட பணத்தினால் தண்டிக்கப்படுதல்" என்னும் சொற்களில் தொடங்கி அப்பிரிவு முடியும்வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"ஆயிரம் ரூபாவுக்குக் குறையாததுடன் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத, கூறப்பட்ட பணத்தினால் ஒரு மாதத்திற்குக் குறையாத அத்துடன் வருடத்திற்கு மேற்படாத மற்றொரு தண்டனையினால் அல்லது அத்தகைய கூறப்பட்ட பணம் மற்றொரு தண்டனையாகிய இரண்டினால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.".

9. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு அப்பிரிவின் ஓராம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) "ஒதுக்கு அல்லது கிராமக் காடொன்றில் உள்ள ஒழிக்கப்படாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒதுக்கு அல்லது பேணல் அல்லது கிராமக் காடொன்றில் உள்ள ஒழிக்கப்படாத" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"வீடுகள் அல்லது குடிசைகள் கட்டுவதை ஒழுங்குபடுத்தல் அல்லது தடைசெய்தல், அத்தகைய வீடுகளை அல்லது குடிசைகளை [illegible] முருகை அல்லது சிப்பிகளைத் தோண்டி எடுத்தல், காரீயம் தோண்டுதல் அல்லது அகழ்தல் அல்லது இரத்தினக்கற்கள் [illegible] அல்லது கண்ணாம்பை அல்லது நிலக்கரியை எரித்தல் அல்லது பாறைகளைத் தகர்த்தல் அல்லது பாறைகளை உடைத்தல் அல்லது கனிப்பொருட்களை.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

10. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) "ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குறிப்பிட்ட பணத்தினால் அல்லது ஆறு மாதங்களுக்குக் குறையாத அத்துடன் ஒரு வருடத்திற்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனையினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக 'இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவுக்குக் குறையாத அத்துடன் இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குறிப்பிட்ட பணத்தினால் அல்லது ஒரு வருடத்திற்குக் குறையாத அத்துடன் நான்கு வருடங்களுக்கு மேற்படாத மறியற்றண்டனையினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) அப்பிரிவின் காப்பு வாசகத்தை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும்—

"ஆயின் 20 ஆம் பிரிவின் ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியை மீறி ஏதேனும் காட்டில் இருந்து எவையேனும் காட்டு மரத்தை அல்லது வெட்டு மரத்தை விழ்த்துகின்ற, வெட்டுகின்ற, அரிகின்ற, முறிக்கின்ற அல்லது அகற்றுகின்ற அல்லது கல்லை அகழ்கின்ற அல்லது முருகைக்கற்களை அல்லது பொரிகளை எடுக்கின்ற அல்லது காரீயத்தை அல்லது இரத்தினக்கற்களைக் கிண்டியெடுக்கின்ற அல்லது அகழுகின்ற அல்லது சுண்ணாம்பை அல்லது நிலக்கரியை எடுக்கின்ற அல்லது பாறைகளை உடைக்கின்ற அல்லது கனிப்பொருட்களுக்காகத் தரையைத் தோண்டுகின்ற ஆள் ஏதேனும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆறு மாதங்களுக்குக் குறையாததும் நான்கு வருடங்களுக்கு மேற்படாததுமான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவை நீக்கஞ்செய்தல்.*

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

12. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தாறாம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நேரே அடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்—

"(உ) வெட்டு மரத்தையும் காட்டு மர இனங்களின் விதைகளையும், அத்துடன் ஏனைய காட்டு விளைபொருள்களையும், இறக்குமதி செய்வதனையும், ஏற்றுமதி செய்வதனையும் ஒழுங்குபடுத்துவதையும் அவற்றுக்கான அனுமதிச் சீட்டுகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தலும்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "வெட்டப்பட்ட ஏதேனும் வெட்டுமரத்தை உள்ளடக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வெட்டு மரத்தை உள்ளடக்கும்" என்பதுடன் "காட்டு மர இனங்கள்" என்னும் சொல் அமைப்பு (1) ஆம் அட்டவணையில் அல்லது (ii) ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மரங்களுள் ஏதும் அத்துடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் காலத்திற்குக்காலம் அமைச்சரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் வேறு மரங்கள் என்று பொருளாகும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்தல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவானது, 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தில் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) "இருநூறு ரூபாவுக்குக் குறையாத அத்துடன் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத அத்துடன் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தினால் என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான இரண்டாவது காப்பு வாசகத்தில் "இருநூறு ரூபாவுக்குக் குறையாத அத்துடன் இரண்டாயிரம் ரூபாவுக்குக் கூடாத காப்பு வாசகத்தினால் அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத அத்துடன் ஒரு வருடத்திற்குக் குறையாத மறியற் தண்டனை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாத அத்துடன் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத்தினால் அல்லது ஆறு மாதங்களுக்குக் குறையாத அத்துடன் இரண்டு வருடங்களுக்கு மேற்படாத மறியற் தண்டனையினால் அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற் தண்டனை ஆகிய இரண்டினாலும்," என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) "மூன்று மாதங்களுக்குக் குறையாத அத்துடன் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத மற்றொரு தண்டனைக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆறு மாதங்களுக்குக் குறையாத அத்துடன் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத மற்றொரு தண்டனைக்கு"; என்னும் சொற்களை இடுவதன் மூலம்

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் 'இருநூறு ரூபாவுக்குக் குறையாத அத்துடன் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத்திற்கு அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத அத்துடன் ஆறுமாதங்களுக்கு மேற்படாத மறியற் தண்டனைக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத அத்துடன்

பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத அத்துடன் ஒரு வருடத்திற்கு மேற்படாத மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற் தண்டனை ஆகிய இரண்டுக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் :

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம் —

"(2அ) இப்பிரிவிற்கு முற்போந்த ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும் 2 ஆம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட எவரேனும் ஆள் அதில் குறிப்பிடு செய்யப்பட்ட தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுகிறவிடத்து அத்தவறைப் புரிவதில் பயன்படுத்தப் பட்ட எந்தக் கருவியின், படகின், வண்டியின், கால்நடையின் அல்லது மோட்டார் வாகனத்தின் சொந்தக்காரராக இருக்கின்றாரோ அல்லது அவரது உடைமையில் வைத்திருக்கின்றாரோ அந்த வேறு ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்திற்கு அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாததும், இரண்டு வருடங்களுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது "ஏதேனும் அனுமதிப்பத்திர சிட்டை வழங்குதல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் அனுமதிச்சிட்டை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் 3 ஆம் உட்பிரிவில் "ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத அத்துடன் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத அத்துடன் ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(2) "மோட்டார் வாகனம்" என்ற சொற்கள் அப்பிரிவில் காணப்படும் இடங்களில் எல்லாம் அவற்றுக்குப் பதிலாக "மோட்டார் வாகனம், இழுவை வண்டி, இழுவைப்படகு, தொடர் வண்டி மோட்டார் படகு அல்லது வேறு வகையான வேறு ஏதேனும் போக்குவரத்து முறை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. 1966 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது அப்பிரிவின் இரண்டாம் உட்பிரிவில் "ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப் பகுதிக்கான மறியற் தண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது இவை இரண்டுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஒரு வருடத்திற்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கான மறியலுக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத அத்துடன் ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற் தண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவானது அதன் இரண்டாம் உட்பிரிவில் "நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தினால் அல்லது ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய மறியற்றண்டனையினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத அத்துடன் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தால் அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத இரண்டு வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியல் தண்டனையினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது,

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவானது "பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்கள், இழுவை வண்டிகள், படகுகள், தொடர் வண்டிகள் மோட்டாருடன் அல்லது வேறு வகையாக இயங்கும் வேறேதேனும் போக்குவரத்து வகைகள், சாதனங்கள் மற்றும் இயந்திரங்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 38அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

19. 38 ஆம் பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தில் 38அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"37 ஆம் பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட சாதனத்தை விடுத்தல்.

38அ. (1) நீதிமன்றமானது (இப்பிரிவிலும் 42 ஆம் பிரிவிலும் "உற்பத்திப் பொருள்" எனக் குறிப்பிடப்படும்) 37 ஆம் பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட ஏதேனும் கருவி, படகுவண்டி, கால்நடை, மோட்டார் வாகனம், இயந்திரம், கருவி இழுவைகள், படகு இழுவை வண்டி அல்லது மோட்டார் மூலமாக அல்லது வேறு வகையாக இயங்கும் வேறேதேனும் போக்குவரத்து சாதனம் அத்தகைய நீதிமன்றத்தின் முன் காண்பிக்கப்பட்டதன் பின்னர் எந்நேரத்திலும் விடுவிக்கின்றபோது சொந்தக்காரருக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரருக்கு வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் பிணைப்பொறுப்பாக விடுவிக்கப்படவிருக்கும் உற்பத்திப் பொருளின் பெறு

மதியை அவர் நீதிமன்றத்தில் வைப்பிலிடுவதன் மேல் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதிக்கு விடயத்திற்கு ஏற்றாற்போல் அதன் சொந்தக்காரருக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரருக்கு அது விடுவிக்கப்படவேண்டுமென நீதிமன்றம் பணிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் சொந்தக்காரருக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரருக்கு விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏதேனும் உற்பத்திப்பொருள், 37 ஆம் பிரிவின் கீழ் அதன் பின்னர் பறிமுதல் செய்யப்பட்டால் அது ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் அதன் சொந்தக்காரருக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரருக்கு விடுவிக்கப்படலாம்.

(3) ஏதேனும் உற்பத்திப் பொருளை விடுவிப்பதற்காக (1) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் பிணைப்பொருப்பாக நீதிமன்றத்தில் வைப்பிலிடப்பட்ட ஒரு தொகையை அத்தகைய ஆள் அதன் சொந்தக்காரராக அல்லது பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரராக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அத்தகைய உற்பத்திப் பொருள் தொடர்பாக அல்லது அதனைப் பயன்படுத்துவதன் மூலம் காட்டுத் தண்டனையொன்றுக்கு ஆளொருவர் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் அரசுக்குப் பறிமுதல் செய்யப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

20. 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தில் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை இடுவதன் மூலமும் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது :—

"(ஆ) அத்தகைய தவறுகள் புரிவதில் பயன்படுத்தப்பட்ட சகல கருவிகளும், படகுகளும், வண்டிகளும், கால்நடைகளும், மோட்டார் வாகனங்களும், இழுவை வண்டிகளும், இழுவைப் படகுகளும், இழுவைகளும் அல்லது மோட்டாரால் இயங்கும் அல்லது வேறு வகையான வேறேதேனும் போக்குவரத்து முறையும் அத்துடன் எல்லாச் சாதனங்களும், இயந்திரங்களும் (அத்தகைய கருவிகள், படகுகள், வண்டிகள், கால்நடைகள், மோட்டார் வாகனங்கள், இழுவை வண்டிகள், இழுவை அல்லது மோட்டாரால் இயங்கும் அல்லது வேறு வகையான போக்குவரத்துச் சாதனங்களும், அவை அத்தகைய ஆளுக்கு சொந்தமாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி)" ;

21. 1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு "37 ஆம் பிரிவின் கீழ் கரிதமாகவும் இயற்கையாகவும் ஒழிந்து போவதற்கு அமை [illegible] ஆசனம்" என்னும் [illegible] பதிலாக "37 ஆம் பிரிவின்கீழ் விரைவாகவும், இயற்கையாகவும் அழிந்து [illegible] கீழ் சொந்தக்காரருக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரருக்கு விடுவிக்கப்படப் போகுமானதுமான எதேனும் ஆசனம்." என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவானது அப்பிரிவின் ஓராம் உட்பிரிவில் "ஆறு மாதங்களுக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலப்பகுதிக்கான மறியற் தண்டனைக்கு அல்லது நூறு ரூபாவுக்கு நீடிக்கக்கூடிய குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒரு வருடத்திற்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற் தண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத் திற்கு அல்லது அத்தகைய மறியற் தண்டனையோ குற்றப்பணமோ ஆகிய இரண்டுக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

23. 1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு "இரண்டு வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆறு மாதங்களுக்குக் குறையாததும் இரண்டு வருடங்களுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண் டனைக்கு அல்லது பததாயிரம் ரூபாவுக்குக்குறையாத அத்துடன் ஐம்பதி னாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அத்தகைய மறியற் றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

24. 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் "காட்டு உத்தியோகத்தர் அல்லது வலயக்காட்டு உத்தியோகத்தர் எவரேனும் கைது செய்யப் படும் விடத்து அத்தகைய காட்டு உத்தியோகத்தர் அத்தகைய ஆள் அருகிலுள்ள நீதிவான் முன்னிலையில் கொணரப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "காட்டு உத்தியோகத்தரால் கைது செய்யப் படின் இத்து காட்டு உத்தியோகத்தரால் அல்லது வலயக்காட்டு உத்தி யோகத்தர் பதவி வரிசைக்கு குறையாத காட்டு உத்தியோகத்தரால் அருகிலுள்ள நீதிவான் முன்னிலையில் அத்தகைய ஆள் கொணரப்படு தல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஐந்து வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியலுக்கு அல்லது ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டிற்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒரு வருடத்திற்குக் குறையாததும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கான அல்லது இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 49அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

26. 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 49அ என்னும் பிரிவு "இரண்டாயிரம் ரூபாவுக்குக் குறையாத ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் மேலும் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 53அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) "இக்கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் அல்லது 14 ஆம் பிரிவின்கீழ் அல்லது 20 ஆம் பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "இக்கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் அல்லது 7அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 14 ஆம் பிரிவின் கீழ் அல்லது 20 ஆம் பிரிவின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்".

(ஆ) "அத்தகைய காணியிலிருந்து வெளியேற்றப்படுவதற்கு ஆளாதல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய காணியிலிருந்து வெளியேற்றப்படுதல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு (அ), (ஆ) அத்துடன் (இ) என்னும் பந்திகளுக்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

| | "ரூ. சதம் |
|---|---|
| (அ) ஒவ்வொரு யானைக்கும் அல்லது எருமைக்கும் | 5000 00 |
| (ஆ) ஒவ்வொரு கன்றுக்கும், கழுதைக்கும், பன்றிக்கும் செம்மறி ஆட்டிற்கும், வெள்ளாட்டுக்கும், ஆட்டுக்கும் அல்லது கன்றுக்கும் | 2500.00 |
| (இ) மேலே கூறப்பட்டது தவிர்ந்த வேறு ஒவ்வொரு கால்நடைக்கும் | 600.00". |

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 59அ, 59ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

29. 59 ஆம் பிரிவை நேரே உடனடுத்து பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ மற்றும் 59ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுடைத்தாதல் வேண்டும் :—

"வனப்பாது காவலர் தமது கடமைகளை கைபளித்தல்.

59அ. வனப் பாதுகாவலர் இக்கட்டளைச் சட்டத்தினால் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியினால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அவர்மீது முறையாக அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை காட்டு அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாம்.

"வனப்பாது காவலரினால் விடுக்கப்படும் பொதுவான பணிப்புரைகள்.

59ஆ. இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அல்லது அவற்றின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியின் கீழ் தனது தத்துவங்களை பிரயோகிப்பதிலும் தமது கடமைகளை பெறுவதிலும் 58 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எல்லா காட்டு அலுவலர்களும் 58 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் காட்டு அலுவலர் ஒருவரின் பணிகளைப் புரிவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எல்லா ஊழியர்களும், அலுவலர்களும் வனப்பாதுகாவலரின் பொதுவான பணிப்புரைக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைந்தவர்கள் ஆதல் வேண்டும்."

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"காட்டு அலுவலர்கள் பகிரங்க அலுவலர்களாகவும், சமாதான அலுவலர்களாகவும் கருதப்படுதல்.

60. எல்லாக் காட்டு அலுவலர்களும் —

(அ) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படப் பகிரங்க அலுவலர்களாக; அத்துடன்

(ஆ) 1979 ஆம் ஆண்டின் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்பட சமாதான அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.".

31. 1988 ஆம் ஆண்டின் 84ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 78ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "கால்நடை" என்ற சொல்லின் வரைவிலக்கணத்திற்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்—

"விலங்கு" என்பது முதுகெலும்புள்ள அல்லது முதுகெலும்பில்லாத ஏதேனும் விலங்கு என்று பொருளாவதோடு ஒரு பறவையையும், மீனையும் அல்லது ஊர்வனவற்றையும் உள்ளடக்கும்;

(2) "வகுப்பாக்கல்குறி" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"பாதுகாப்பு வனம்" என்பது அரச காணியில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாகம் அல்லது அரச காணியின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பு அல்லது பாதுகாப்பு வனமொன்றாக இருப்பதற்கென 3 (அ) என்னும் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் கைக்கப்பட்ட காட்டின் முழுமையும் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாகம் என்று பொருளாகும்.

(3) "காட்டு அலுவலர்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"காட்டு அலுவலர்" என்பது பாதுகாவலர்கள் மேலதிகப் பாதுகாவலர்கள், பிரதிப் பாதுகாவலர்கள், உதவிப் பாதுகாவலர்கள், பெரும்பாக காட்டு அலுவலர்கள், மேலதிக பெரும்பாக காட்டு அலுவலர்கள், காடு பேணும் அலுவலர்கள், விசேட காட்டு அலுவலர்கள், மேலதிக விசேட காட்டு அலுவலர்கள், காட்டு மேற்பார்வை ஊழியர்கள், காட்டு கண்காணிப்பாளர்கள், மற்றைய காட்டு அலுவலர்கள், காட்டுக் காவலாளிகள், காட்டுக்காவல் உத்தியோகத்தர்கள், காட்டுத் தொழிலாளிகள் என்போராக இருக்கவென பெயர் மூலம் நியமிக்கப்பட்ட அலுவலர் பதவியை வகிக்கின்ற எல்லா ஆட்களும் எவையும் இக்காட்டுச் சட்டத்தின் அலுவலர் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின் ஏற்பாடுகளுக்குக் கீழ் காட்டு அலுவலர் ஒருவராக ஏதேனும் பணியைப் புரிவதற்கு பெயர் மூலம் அல்லது பதவி மூலம் நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளென்றும் பொருளாகும் ;"

(4) "அரசின் கையுதிர்ப்பில் உள்ள" எனும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"தாவரம்" என்பது தாவர இராச்சியத்திலுள்ள ஏதேனும் தாவரம் என்று பொருளாவதோடு ஏதேனும் தாவரத்தின் விதையை அல்லது வேறு ஏதேனும் பாகத்தை உள்ளடக்கும்."

(5) "மரம்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"காட்டு விலங்கு" என்பது வீட்டு விலங்கு அல்லாத ஏதேனும் விலங்கு என்று பொருளாகும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.

32. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 1 ஆம் அட்டவணையை இத்தால் நீக்கம் செய்யப்பட்டு பின்வரும் அட்டவணை அதற்குப் பதிலாக இடப்படுகிறது :—

## அட்டவணை 1

(பிரிவு 13)

| சிங்களப்பெயர் | தமிழ்ப்பெயர் | தாவரப்பெயர் |
|---|---|---|
| அகாசியா | அகாசியா | அகேசியா ஓரிகூலிபோமிஸ் |
| அகேசியா | அகேசியா | அகேசியா மொஞ்சியம் |
| அரளு | கடுக்கை | டேமினெலியா செபுல |
| பெலி | வில்வம் | எய்கல் மாமிலோஸ் |
| புளு | தானிமரம் | டேமினேலியா பெலரிக்கா |
| புருத்த | முதிரை | குளோரக்சிலோன் சுவீற்னியா |
| தெல், பெடிதெல் | அசினிப்பிலா, அயினிமரம் | ஆர்டோகாபஸ் நொபிலிஸ் |
| திவிகுரு | கண்டப்பாலை | பலியந்தா டிகொடோமா |
| திவுல | நிலவிளா | லிமோனியா எசிடிசிமா |
| தொம்ப | புன்னை | கலோபைலம் இனோபிலம் |
| துன | குங்கிலியமரம் | டூனா சைலேனிகா |
| எஸ்கொடோல் | கண்டல் | ரைசோபோரா முக்ரோனாதா |
| எத்தெமட | குரிலாமரம் | கெமிலினா ஆர்போரியா |
| யுகலிப்டஸ் | சஞ்சீவி | எல்லா யுகோலிப்டஸ் ஸ்பசஸ் |
| கம்மலு | வெங்காய் | டெரோகாப்பஸ் மாசுபியம் |
| கிளிரிசீடியா | சீமை கிளுவை | கிளிரிசீடியா செபியம் |
| ஹல்மிலியா | சவண்டலை | பெர்யா கோடிபோலியா |
| ஹுலன்ஹிக | அகிலை, கலொட்டி | சுக்ரேசியம் வெலுடீனா |
| இபில இபில் | இபில | ஒல் இகோனா ஸ்பீசஸ் |
| கிரடால | கண்டல் | ரைசோபோரா எபிகுலாடா |
| களுமெடிரியா | பிசுருணகலி | டைசோபைரஸ் குவஸிட்டா டி. ஓபசிடிபோலியா |
| களுவர | கருங்காலி | டயோசைபரஸ் எபினம் |
| கசா | சவுக்கு | கசோரினா இகுசெடிபோலியா |
| கினா | — | கலோபிலம் டொமன் டோசம் |
| கினா | — | கலோபிலம் வல்கேரி |
| கிரலா | கின்னா | சனோனெரெடியா கெசியோலாரிஸ் |
| கோம்பா | வேம்பு | எசெடிராஸ்டா இண்டிகா |
| கொஸ் | பலா | ஆர்ட்டோகாபஸ் இட்ரோபிலஸ் |
| கும்புக் | மருது | டேமினேலா அர்ஜுனா |
| லுனுமிதெல்ல | மலைவேம்பு | மிலியா டுபியா |
| மலகடோல | சொரிகாகண்டம் | புருவகா ரம்பினோசா |
| மஹமாரா | மயிரம் | டெலனொக்ஸ் ரிஜியா |
| மொனரடொரா | — | வெடிகா சம்னிடஸ் |
| மீ | இலுப்பை | மதுகா லோங்கிபொலியா |
| மில்லா | காட்டாமணக்கு அல்லது மயிலல் | வீடெக்ஸ் அல்டிஸமா |
| முதில்ல | கடம்பு | பெரிங்டோனியா |
| நா | நாகா | மீஸா பெரியா |
| நெதுன் | — | பெரிகொப்சிஸ் மூனியானா |
| நெல்லி | நெல்லி | பைல்லந்தஸ் எம்பிலிகா |

| சிங்களப்பெயர் | தமிழ்ப்பெயர் | தாவரவியற்பெயர் |
|---|---|---|
| பாலு | .. பாலை | .. மனில்காரா கெக்ஸான்ட்ரா |
| பிமயியா | .. இருந்தலை வேம்பு | .. பிலீஷியம் டிசினிலை |
| பயனை | .. பிலவு | .. ஓலப்ஷிளஸ் ஸைலோசன |
| மினியாற | .. இளவலகை | .. சாபனியா சாபன |
| புனரண்ட | .. சமுக்கந்தல | .. சமீனெ டாகல |
| ருக் அத்தன | .. ஏழிலைப் பாலை | .. அல்ஸ்டோனியா ஸ்கொலரிஸ் |
| சப்பு, அப்பு, கினிசப்பு | .. செண்பகம் | .. மிசிலியா சம்பகா |
| சியம்பலா | .. புளி | .. தெமரின்டஸ் இந்திக்கா |
| சூரியமாரா, கிமாரா | .. பொன்னை முறுங்கை | அல்பீசியா லுபியமா |
| தம்மன | .. தம்பானை | .. யிஸ்டோடன ஸைலனஸ் |
| தேக்க | .. தேக்கு | .. டெக்டோனா காந்திஸ் |
| வலவேல | .. வேங்கை | .. டெறுறோகோபஸ இந்திகஸ் |
| வலசப்பு, வலபுஹுந்த | — | .. மிசிலியா நிலகிரிகா |
| வேரா | .. ஈனை, பாவாரணை.. இவவகை | பெல்டபூரம், பெட்ரகோபம் |

ஒவ்வாமை விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

33. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ருமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளில் வருடாந்த சந்தா
டு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,859 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந்
குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவல
, இல, 32, டிரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட் கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு
அனுப்பப்பட வேண்டும்.